முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 125/2025

வாதி தரப்பு சாட்சி–1 மலர் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 17.06.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். இறந்து போன மாணிக்கம் எனது தகப்பனார். எனது தகப்பனாருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் சின்னம்மாள், 2ம் மனைவியின் பெயர் தொட்டாயி. சின்னம்மாள் உயிருடன் இல்லை. 2ம் மனைவி இருக்கிறார். சின்னம்மாளுக்கு நான் மட்டும்தான் வாரிசு. 2ம் மனைவி தொட்டாயிக்கு 2ம் வாதி வேல்முருகன் மட்டும்தான் வாரிசு. முதல் மனைவி உயிருடன் இருந்த போதே 3ம் வாதியை மாணிக்கம் திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம். 3ம் வாதி இறந்து போன மாணிக்கத்தின் சட்டப்படியான மனைவி அல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து எங்களை விசாரித்தார்களா என்றால் ஞாபகமில்லை. சரியான ஆவணங்கள் கொடுக்காததால் எங்களுக்கு வாரிசு சான்றிதழ் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்து 20 வருடங்கள் வாரிசு சான்றிதழ் வாங்காததற்கு என்ன காரணம் என்றால், எங்கள் அறியாமையின் காரணத்தால் வாங்கவில்லை. வாரிசு சான்றிதழ் எதற்காக தேவைப்படுகிறது என்றால், எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்தை பெயர் மாற்றம் செய்ய தேவைப்படுகிறது. உரிய ஆவணங்கள் கொடுக்காததால்தான் வாரிசு சான்றிதழ் வழங்கவில்லை என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

Principal District Munsif,
Kulithalai.